8. அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு இணங்கவும், பேரவை அனுமதியுடனும், 16-4-2002 அன்று பேரவை விதி 185-ஐத் தளர்த்தி, நிதி அலுவல்களை எடுத்துக்கொள்வதற்கு முன்பு அரசினர் தனித் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும். அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

7. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை—*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 17—கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்—*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 42—சிறு தொழில்கள் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.எஸ். கண்ணன், இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டும். அதனால் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** பேரவைத் தலைவரவர்களே, மின் துறை, சிறுதொழில்கள், கைத்தொழில்கள் ஆகிய துறைகளைப் பற்றிப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் இந்தத் துறைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், நம்முடைய முதல்வர் அவர்கள், தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெறச் செய்து, தமிழகத்தைப் பொருளாதாரத் துறையில் முதன்மையாகக் கொண்டு வருவேன் என்று உறுதி பூண்டு இருக்கின்றார்கள்.